## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட மகாவலி மதியுரைச் சேவைகள் பணியகக் (தனியார்) கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு

போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணேவல அணையை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இருப்பு கம்பிகள் மற்றும் இரும்பு வாயிற் கதவுகளின் இருப்புக்கள் அந்த ஒப்பந்தம் நிறுத்தப்பட்டமையின் காரணமாக துருப்பிடித்தலுக்கு உட்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தது. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியம இலக்கத்தின் 13.4 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பின் கிரயம் அல்லது தேறிய தேறக் கூடிய பெறுமதி இரண்டில் குறைந்த பெறுமதி சொத்தாக கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த இரும்பு இருப்பின் தேறிய தேறக் கூடிய பெறுமதி கணிப்பீடு செய்யப்படாமல் ரூபா 1,412,685 தொகையான கிரயத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியம இலக்கத்தின் 13.4 ஆம் பிரிவின் பிரகாரம் தேறிய தேறக் கூடிய பெறுமதி, அத்திகதியில் உள்ளவாறான சந்தைப் பெறுமதியாக கவனத்தில் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு புறம்பான விடயங்களின் காரணமாக அந்த இருப்பு தொழில்நுட்ப உத்தியோகத்தரை வரவழைத்து வருடா வருடம் பெறுமதி கணிப்பிட முடியாதிருந்ததுடன் (2018 முதல்) தற்போது இருப்பை அகற்றுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமத்தின் 10.21 ஆம் பந்தியின் பிரகாரம் போதியளவான முன்னைய காலப்பகுதியின் தவறுகள், அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் பிற்போட்ட ரீதியில் சீராக்கி ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீளமைக்கப்பட்டு தவறுகளின் தன்மை மற்றும் சீராக்கப்பட்ட முறை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எனினும் கணேவெல அணை நிர்மாணம் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்ற முடியாமையின் காரணமாக முன்னைய ஆண்டில் ஏற்பட்டிருந்த ரூபா 2,730,169 தொகையான செயற்பாட்டு நட்டம் வங்கிக் கட்டணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த தவறு நிதிக் | தற்போது இந்தக் கம்பனியை கலைப்பதற்கு எதிர்பார்த்து செயற்படுகின்றமையினால் தேவையான தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் நிறுவனத்தை விட்டுச் சென்றமையின் காரணமாக இந்த ஒப்பந்தத்தை பூர்த்திசெய்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமையின் காரணமாக வங்கியில் நிறுத்தி வைக்கப்பட்ட செயலாற்றல் பெறுமதி மற்றும் முற்பண காப்பீடு என்பன அறவிடப்பட்டுள்ளது. இது நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு புறம்பாக ஏற்பட்ட விடயமாகும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியம இலக்கத்தின் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக கம்பனிக்குச் சொந்தமான ரூபா 3,629,951 கிரயமான 25 நிலையான சொத்து விடயங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை மீள்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த நியமத்திலுள்ள விடயங்களின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து புத்தகங்களில் உள்ளடக்குவதற்கு இந்த வருடத்திலிருந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 2,972,630 பெறுமதியான நிலையான வைப்பை பணமாக்குதல் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சலாக குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் காசு வெளிப்பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றின் வழுக்களை 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 செப்தெம்பர் 25 ஆந் திகதிய அமப/19/2550/104/076 ஆம் இலக்கம் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் இந்த கம்பனியை கலைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் 2019 ஒக்தோபர் 15 ஆந் திகதிய அமப/19/2770/104/083 ஆம் இலக்கம் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனி விவசாய, கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்தக் கம்பனி 2020 திசெம்பர் 30 ஆந் திகதி முதல் | உரிய உரித்து பூர்த்தி செய்யப்படுவது பங்குகளின் உரித்தை கையேற்கப்பட்டதன் பின்னராக இருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் போது மேற்கூறப்பட்ட விடயங்கள் எதிர்பார்க்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட விடயமாக இருந்தமையினால் கம்பனியின் நிதிக் | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நீர்ப்பாசன அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அதன் கொள்கை ரீதியான தீர்மானத்தை அமுல்படுத்துதல் மற்றும் கம்பனியின் பங்குரிமையில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாக கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் எந்தவொரு வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 வருடங்களை விஞ்சிய ரூபா 7,718,908 தொகையான பெறவேண்டிய 09 கணக்கு மீதிகளுக்காக மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இலங்கை மகாவலி அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டியதாக காண்பிக்கப்பட்ட ரூபா 1,319,471 தொகை அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அணைப் பாதுகாப்பு செயற்திட்டத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 442,647 தொகை அந்த செயற்திட்டம் முடிவடைந்திருந்தமையினால் அறவிடுவதில் பிரச்சினைகள் எழுந்திருந்தது. மேலும் நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 100,000 மீதியும் தொடர்ச்சியாக உறுதிப்படுத்தப்படாமல் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சகல பெறவேண்டிய மீதிகளையும் உறுதிப்படுத்துவதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. முகாமைத்துவத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து இந்த மீதிகளில் 2021 மார்ச் வரையில் ரூபா 3,058,057 வரை பெறப்பட்டுள்ளதுடன் தற்போது அந்த மீதி ரூபா 4,660,851 வரை குறைக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி மீதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13,343,494 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் காணப்பட்டதுடன் அதில் ரூபா 10,243,521 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாமல் காணப்பட்டது. | 05 வருடங்களை விஞ்சிய செலுத்த வேண்டிய மீதியாக ரூபா 10,243,521 தொகை 2020 திசெம்பர் 31 இல் காண்பிக்கப்பட்ட போதிலும் முகாமைத்துவத்தின் ஆலோசனையின் பிரகாரம் | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செயற்பட்டு 2021 ஏப்ரல் மாதம் வரையில் ரூபா 6,644,211 செலுத்த வேண்டிய மீதி தீர்க்கப்பட்டுள்ளதுடன் மிகுதி மீதி தற்போது பூர்த்திசெய்யப்படாதுள்ள செயற்திட்டங்களின் முற்பண நிறுத்தி வைத்தலாக காண்பிக்கப்பட்டுள்ளது.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 இன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இதுவரை வரைபு ஆண்டறிக்கையை நிறுவனம் சமர்ப்பிக்காதிருந்த துடன் 2021 ஆம் ஆண்டு முதல் வரைபு ஆண்டறிக்கை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் தயவுடன் அறியத்தருகின்றோம் . | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,924,210 நட்டமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 2,373,187 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 16,297,397 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கம்பனியால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான செயற்திட்டம் மற்றும் பொறியியல் பிரிவுகளில் எந்தவொரு புதிய செயற்பாட்டு நடவடிக்கைகளும் கையேற்கப்படாமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் மீளாய்வாண்டில் செயற்படுநிலைக்கு கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கிய செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் ஆண்டில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுகைகளை உள்ளடக்கிய பெறுகைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | இதுவரையில் இந்தக் கம்பனி கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக அதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையினால் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் புதிய செயற்பாட்டு நடவடிக்கைகள் கையேற்கப்படாமையின் அடிப்படையில் மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பெறுகைத் திட்டம் என்பன தயாரிக்கப்படவில்லை. எனினும் 2021 ஆம் ஆண்டின் போதான அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிறுவனம் மீள ஸ்தாபிக்கப்பட்டு புதிய செயற்பாட்டு நடவடிக்கைகள் பேணிச் செல்லப்படுகின்றன. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக செயற்திட்டம் மற்றும் பொறியியல் பிரிவுகளில் எந்தவொரு புதிய செயற்பாட்டு நடவடிக்கைகளும் கையேற்கப்படாதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் கம்பனியின் ரூபா 90,203,907 தொகையான செயற்பாட்டு வருமானம் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 29,808,040 வரை குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது எந்தவொரு வருமானமும் பெறப்படாதிருந்ததுடன் ரூபா 4,083,465 தொகையான நிலையான வைப்பு வட்டி மாத்திரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளில் தொடர்ச்சியாக இலாபம் பெறப்பட்டிருந்தது. கம்பனி மீளாய்வாண்டின் போது ரூபா 13,924,210 தொகையான நட்டத்தை பெற்றிருந்தது. | இதுவரையில் இக்கம்பனி கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டமையின் காரணமாக அதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையினால் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் புதிய செயற்பாட்டு நடவடிக்கைகள் கையேற்கப்படாமையின் அடிப்படையில் மீளாய்வாண்டில் எந்தவொரு வருமானமும் அறிக்கையிடப்படவில்லை. எனினும் 2021 ஆம் ஆண்டின் போதான அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிறுவனம் மீள ஸ்தாபிக்கப்பட்டு புதிய செயற்பாட்டு நடவடிக்கைகள் பேணிச் செல்லப்படுகின்றது. | நிறுவன ரீதியான நடவடிக்கைகளை செயற்திறனாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் போது மொரகஹகந்த சுற்றுலா விடுதி மற்றும் பார்வையாளர் மேடையை நிர்மாணிப்பதற்கான உப ஒப்பந்தத்தை வழங்கும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக செயற்பட்டமையினால் கம்பனிக்கு ரூபா 20,200,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 21 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவினால் இது தொடர்பாக முறையாக பரிசோதனையொன்று ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் பொது முயற்சிகள் குழுவிற்கு அறிக்கையிட வேண்டியிருந்தமை பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு திகதியான 2021 ஆகஸ்ட் 02 வரை உரிய பணத்தை அறவிடுவதற்கான சட்டரீதியான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பெறுகை வழிகாட்டி கோவைகளுக்கு முரணாக செயற்பட்டதாக அவதானிக்கப்படுகின்ற தலைவர் மரணமடைந்திருந்த மையினால் அறவிடுவதற்காக எடுக்கப்பட வேண்டிய சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளதுடன் அந்த ஆலோசனை கிடைத்ததன் பின்னர் மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கம்பனிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் காணப்படாதிருந்ததுடன் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்தோ அல்லது பணிப்பாளர் சபையின் மூலமோ அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக கம்பனியின் பதவியணிக்காக ஆட்சேர்த்தல், பதவியுயர்வு, பதவிகளுக்குரிய தகைமைகள் மற்றும் சம்பளம் என்பவற்றை தீர்மானித்தல் என்பவற்றின் சரியான தன்மை தொடர்பாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | கம்பனியை கலைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக 2018 ஆம் ஆண்டு முதல் கம்பனியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களை நிறுத்துவதற்கும் மற்றும் பதவியணியினர்களை ஆட்சேர்த்தல், பதவியுயர்வு, சம்பள அதிகரிப்புக்களை கைவிடலின் அடிப்படையில் கம்பனிக்காக குறித்துரைத்த பதவியணியினர் மற்றும் அதற்குரிய ஆட்சேர்த்தல் நடைமுறைகள் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பினை மேற்கொண்டு நிறுவன நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் புதிய முகாமைத்துவத்தின் கீழ் நிறுவனத்திற்கு கிடைக்கின்ற புதிய செயற்திட்டங்களை கவனத்தில் கொண்டு அதன் அடிப்படையில் நிறுவன கட்டமைப்பினை மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | கம்பனியின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கையான மதியுரைச் சேவைகளை அமுல்படுத்துவதற்கு உரிய முகாமையாளர் (செயற்திட்டம்) பதவி மற்றும் பொறியியல் பிரிவில் பொறியியலாளர் பதவி என்பன 2019 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் 2021 செப்தெம்பர் வரை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியை கையேற்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக 2018 ஆம் ஆண்டு முதல் கம்பனியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களை நிறுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. அதனால் உரிய பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு முடியாதிருந்தது. | - மேற்படி - |